1979 பிப்ரவரி 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுப்பு அவர்கள் சுட்டிக் காட்டிய மெயில் பத்திரிகையில் பிரசுரித்துள்ள வாசகங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கவில்லை.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு இப்பிரச்சினையில் அவை உரிமைமீறிய செயல் எதுவும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமைப் பிரச்சினை ஒன்றைக் கொண்டு வர அனுமதி கேட்டுள்ளார்கள். அப்பிரச்சினை குறித்து அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.

Thiru K. SUPPU : Mr. Speaker, Sir, under rule 184 of the Assembly Rules, I am giving Notice to raise the following matter of privilege against the Hon. Minister for Health, viz.

"On 12-9-1978 the Hon. Minister for Health gave reply to Question No. 173 on the floor of the Assembly. In this reply, the Hon Minister has specifically admitted the fact to the effect that one Dr. Udhayashankar has cheated the Director of Medical Education and also the Government of Tamil Nadu by suppressing certain material particulars for seeking admission to M.D. (Preventive Medicine). He has managed to get appointment as Health officer in Madras Medical college during the period of his studies. He has been drawing a monthly salary and allowances to the tune of Rs. 1,200/- for the said post without attending to the work. The candidate is none-else than the son of an Assistant Director of public Health. When the quession was raised through a starred question, the Hon. Minister admitted the facts and assured the House that action was being taken against the concerned persons. But the fact remains otherwise. The Hon. Minister has led the House to believe that appropriate action would be taken against the persons concerned whereas no such action was taken against them. This will amount to misleading the House and shielding the culprits. Therefore, the matter may be referred to the Committee of Privileges."

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விசாரணையில் இருந்து கொண்டிருக்கிறது என்று இப்போதும் இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இப்பிரச்சினை குறித்து என்னுடைய தீர்ப்பைப் பின்னால் அறிவிக்கிறேன்,

திரு. க. சுப்பு : சொல்லி ஆறு மாதம் ஆகிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் பிறகு தீர்ப்பளிக்கிறேன் என்று சொன்ன பிறகு இதுகுறித்து பேசுவது கூடாது.

திரு. ரா. உமாநாத் : தற்போது இரண்டு பிரிவிலேஜ் மோஷன்கள் வந்திருக்கின்றன. நாம் ஒரு பிரிவிலேஜ் மோஷன் கொடுத்திருந்தேன். இன்னும் அது வரக் காணோம். அது காற்றிலே இருக்கிறதா, ஆகாயத்திலே இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது ஆய்வில் இருக்கிறது.

4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) நக்சல்பாரி கைதிகளை சிறைச் சாலைகளில் இருந்து விடுவிப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 42-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

> ''தமிழகத்தில் சிறைச்சாலைகளில் உள்ள நக்சல்பாரி கைதிகள் அனைவரையும் விடுவிக்கக் கோரி தற்போது கோயம்புத்தூர் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருப்பதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து''

விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று திருவாளர்கள் க. சுப்பு, ரா. உமாநாத், மூ. அம்பிகாபதி, ஆர். கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், கு. ரமணி, ரா. மார்க்கபந்து, ப. சந்திரன், ஜே. ஜேம்ஸ், பொ. விஜயராகவன், ஒ. சே. வேலுச்சாமி ஆகியோர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.00]

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, நக்சல்பாரி போன்ற அரசியல் கைதிகளை விடுதலை செய்வது பற்றிய பிரச்சினை இது. ஏற்கென்வே இந்த பேரவையிலே 3 முறைகள் இது பற்றி எழுப்பப்பட்டு இருக்கிறது. கடந்த முறைக்கு முந்தைய கூட்டத்திலே கூட எழுப்பப்பட்டபோது 5.1.78 அன்று நம்முடைய ஜெயில் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பதில் கொடுத்திருக்கிறார்கள்.